1967 நவம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசினர் நூல் நிலையக் குழுவுக்கு (State Library Committee) 1 ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

6. அரசினர் தீர்மானம்.

அரசினர் நூல் நிலையக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"1950-ம் ஆண்டு தமிழ்நாடு பொது நூல் நிலைய விதிகளின் (2)(1) (v) -வது விதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் குறிப்பிடப்படும் ஒரு தேதியன்று இப்பேரவை, 1948-ம் ஆண்டு தமிழ்நாடு பொது நூல்நிலையச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 25/1948) 3-வது பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட அரசினர் நூல்நிலையக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந் தெடுக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, அரசினர் நூல்நிலையக் குழுவிற்கு ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக, வேட் பாளர் நியமனத் தாள்களை 25-11-1967 சனிக்கிழமை மாலை 3 மணிக் குள், செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட் புத் தாள்கள் 27-11-1967 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 27-11-1967 திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படு மாயின், 28—11—1967 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்களின் ஓய்வு அறையில் வாக்களிப்பு நடைபெறும்.

7. அரசினர் மசோதாக்கள்.

(அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு, கேட்டுப்பெறல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ்நாடு

இன்றியாமையாப் பொருள்கள் கட்டுப் பாடு, கேட்டுப்பெறல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மசோதாவை மன்றத்தின்முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா அறிமுகப்படுத்தப் பட்டது.

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மசோதாவை மன்றத்தின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா அறிமுகப் படுத்தப் பட்டது.

(உ) 1967-ம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967) மீதான கூட்டு ஆய்வுக் குழுவின் அறிக்கையை [a] பேரவைமுன் வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் இன்று 12 மணிக்குக் கூட வேண்டியது, 12-30 மணியளவில் பேரவைத் தலைமை அலுவல் அறையில் கூடும்.

8. 1967-68-ஆம் ஆண்டு தமிழக மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு மின்சாரக் கழகத்தின் நிதிநிலை மீதான விவாதத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

---

[a] 1967 நவம்பர் 24-ம் தேதியிட்ட தமிழக அரசிதழ் (சிறப்பிதழ்) 73–77-ம் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது.